# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பிரசாவுரிமை (திருத்தச்) சட்டம்

---

*(2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2003. ஏப்பிறல் மாதம் 04 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

# 2003 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பிரசாவுரிமை (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 1 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

எ. வ– ஓ. 11/2002

## பிரசாவுரிமைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பிரசாவுரிமை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பிரசாவுரிமைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின், 3 ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :– 349 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(3) மேற்சொல்லப்பட்ட அந்தஸ்தைக் கொண்டுள்ள ஆள் ஒவ்வொருவரும், இதனகத்துப்பின்னர் 'இலங்கைப் பிரசை' எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :– முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அவரது தந்தை வம்சாவளி மூலமான இலங்கைப் பிரசையொருவராக உள்ளார்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அவரது பெற்றோரில் ஒருவர் இலங்கைப் பிரசையொருவராக உள்ளார் அல்லது இலங்கைப் பிரசையொருவராக இருந்துள்ளார்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "அவரது தந்தை வம்சாவளி மூலமான இலங்கைப் பிரசையொருவராக உள்ளார்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அவரது பெற்றோர்களுள் ஒருவர் இலங்கைப் பிரசையொருவராக உள்ளார் அல்லது இலங்கைப் பிரசையொருவராக இருந்துள்ளார்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 5அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு முன்னர் பிறந்த ஆட்களின் தகைமை.

5அ. (1) நியமனத் தேதிக்குப் பின்னர் ஆனால் இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு முன்னர் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே பிறந்திருப்பவரான எவரேனுமாள் –

(அ) அவரது பிறப்பின்போது அவரது தாய் மட்டுமே இலங்கைப் பிரசையாக இருந்திருப்பவராகவும் அவர், இருபத்திரெண்டு வயதுக்கு மேற்பட்டவராகவும் ; அல்லது

(ஆ) அவரது பிறப்பின்போது அவரது பெற்றோரில் எவரும் இலங்கைப் பிரசையொருவராக இல்லாதிருந்து, அவரது பெற்றோரில் ஆகக்குறைந்தது ஒருவர், பின்னர் இலங்கைப் பிரசையொருவராக வரின்,

இப்பிரிவின் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க இலங்கைப் பிரசை ஒருவர் என்னும் அந்தஸ்தைப் பெறுவதற்கு தகமையுடையவராதல் வேண்டும்.

(2) வேறேதேனும் நாட்டின் பிரசையாக உள்ளவரும், இலங்கைப் பிரசாவுரிமையைப் பெறவும் வேறு நாட்டின் பிரசாவுரிமையைத் துறக்கவும் விரும்புகின்றவரும், ஒராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவருமான ஆள் ஒருவர், அத்தகைய வேறு நாட்டில் அது சார்பில் வலுவிலுள்ள சட்டத்திற்கிணங்க அவ் வேறுநாட்டின் பிரசாவுரிமையைத் துறந்திருந்தும், அத்துடன் இலங்கையின் சாதாரண வதிவைக் கொண்டிருந்து தொடர்ந்தும் இருக்கக் கருதியுள்ளவிடத்தும், தான் இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளார் என்னும் வெளிப்படுத்துகைக்காக அமைச்சருக்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம் என்பதுடன், அமைச்சரானவர் எதற்காக விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ, அதற்கான வெளிப்படுத்துகையைச் செய்யலாம்.

(3) வேறேதேனும் நாட்டின் பிரசையாக உள்ள வரும், இலங்கைப் பிரசாவுரிமையைப் பெற விரும்புகின்றவரும், அவ்வேறு நாட்டின் பிரசாவுரிமையைத் தொடர்ந்து வைத்திருக்க விரும்புகின்ற வரும், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவருமான ஆள் ஒருவர், அவர் வேறேதேனும் நாட்டின் பிரசையாக இருக்கிறார் என்பதுடன் தொடர்ந்தும் இருக்கின்றார் என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், அத்தகைய ஆள் இலங்கைப் பிரசையொருவரின் அந்தஸ்தைப் பெற்றுள்ளார் என்ற வெளிப்படுத்துகை ஒன்றுக்கென அமைச்சருக்கு விணணப்பம் செய்யலாம். அத்துடன் அமைச்சரானவர் அத்தகைய வெளிப்படுத்துகையைச் செய்தல் விடயத்தின் எல்லா சூழ்நிலைகளிலும் இலங்கைக்கு நன்மையானதாயிருக்கும் எனத் திருப்தியுற்றால், எந்த வெளிப்படுத்துகைக்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதோ அதற்கான வெளிப்படுத்துகையைச் செய்யலாம்.

(4) இப்பிரிவின் கீழ் வெளிப்படுத்துகையொன்று செய்யப்படுமிடத்து, அமைச்சரானவர், எத்தேதியிலிருந்து அத்தகைய ஆள் இலங்கைப் பிரசையொருவர் என்ற அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளுவாரோ அத்தேதியை குறித்துரைத்தல் வேண்டும்.

(5) பத்தொன்பதாம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு இலங்கைப் பிரசையொருவர் என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ள ஆள் ஒருவருக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) கட்டணங்களின் கொடுப்பனவு தொடர்பிலான முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், இப்பிரிவின் கீழான ஆள் ஒருவரின் விண்ணப்பத்துக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்

செய்யப்படும் விண்ணப்பத்தின்மீது பிரசாவுரிமைச் சான்றிதழை வழங்குதல்.

6அ. (1) ஐந்தாம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, இலங்கைப் பிரசை ஒருவராகவுள்ள எவரேனுமாள், அவர் அவ்வாறு விரும்பினால், பிரசாவுரிமைச் சான்றிதழ் ஒன்றுக்காக, குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பமானது அதற்கான அட்டவணை 'அ' வில் பொருளளவில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(2) கட்டுப்பாட்டாளர், விண்ணப்பகாரரின் அந்தஸ்து குறித்து திருப்திப்படுவதன் மீது, விண்ணப்பத்தைப் பெற்றுக்கொண்டதிலிருந்து அறுபது நாட்களுக்குள் இதற்கான அட்டவணை 'ஆ' வில் பொருளளவில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள படிவத்தில் சான்றிதழ் ஒன்றை விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும்.

(3) பராயமடையாத பிள்ளை ஒருவர் தொடர்பில் அத்தகைய சான்றிதழ் வழங்கப்பட வேண்டியிருக்குமிடத்து, அதற்கான விண்ணப்பமானது, அத்தகைய பராயமடையாத பிள்ளை சார்பாக பெற்றோரில் இருவரில் ஒருவரால் செய்யப்படலாம்.

(4) எவரேனும் ஆள் ஏதேனும் நோக்கத்துக்காக (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பிக்கும்படி தேவைப்படுத்தப்படுதலாகாது என்பதுடன், ஒரு சத்தியக் கடதாசி ; அதன்கண் கூறப்பட்டுள்ள நேர்வுகள் தொடர்பிலான முதற்றோற்ற சான்றாக ஏற்றுக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகிறது.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 9ஆம் பிரிவை நீக்குதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவில் "தந்தை" அல்லது "தந்தையினுடைய" என்னும் அத்தகைய சொற்கள் அப்பிரிவில் தோன்றுமிடமெல்லாம் முறையே "தந்தை அல்லது தாய்" அல்லது "தந்தையினுடைய அல்லது தாயினுடைய" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியை நீக்குவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "எவரது தந்தை வம்சாவளி மூலமான இலங்கைப் பிரசையொருவராக இருந்துள்ளாரோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரது பெற்றோரில் ஒருவர் இலங்கைப் பிரசையொருவராக இருந் துள்ளாரோ" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில், "எவரது தந்தை வம்சாவளிமூலமான, இலங்கைப் பிரசையாக இருந்திருப்பாரோ" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரின் பெற்றோரில் ஒருவர் இலங்கைப் பிரசை யொருவராக இருந்திருப்பாரோ" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன்மூலமும்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மைச் சட்ட வாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவை நீக்குதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை நீக்குதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகிறது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "பராயமடையாத பிள்ளை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் "இருபத்தொரு வயதை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினெட்டு வயதை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் "இருபத்தொரு வயதை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதினெட்டு வயதை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் அட்டவணையைச் சேர்த்தல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் அட்டவணை இத்தால் சேர்க்கப்படுகின்றது.

**"அட்டவணை அ** (பிரிவு 6அ)

**(349 ஆம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டத்தின் 6அ என்னும் பிரிவின்கீழ் பிரசாவுரிமைச் சான்றிதழொன்றுக்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பகாரர்*/ ........................................................ ஆகிய நான் ....................................பராயமடையாத ஒரு பிள்ளையாகிய ..............................என்பவரின் பெற்றோராகிய* ........................ ................................... நான், சட்டத்தின் 6அ என்னும் பிரிவின் நியதிகளின்படி எனக்கு*/மேற்கூறப்பட்ட எனது பிள்ளைக்கு *பிரசாவுரிமைச் சான்றிதழொன்றுக்காக இத்தால் விண்ணப்பிக்கிறேன்.

2. நான்*/மேற்கூறப்பட்ட எனது பிள்ளை.* சட்டத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு நான் ஓர் இலங்கைப் பிரசையாவேன்*/ எனது பிள்ளை* ஓர் இலங்கைப் பிரசையாகும் என இத்தால் நான் வெளிப்படுத்துகின்றேன்.

3. எனது*/மேற்கூறப்பட்ட எனது பிள்ளை* தொடர்பிலான விவரங்களை கீழே தருகின்றேன் :—

(அ) முழுப்பெயர் :.......................................

(ஆ) முகவரி :.......................................

(இ) பால் : ஆண்/பெண் :

(ஈ) பிறந்த தேதி :

(உ) பிறந்த இடம் :

(ஆ) இலங்கைக்கு வெளியே பிறந்திருப்பின், பிறப்பு பதிவுசெய்யப்பட்ட இடம் :

(இ) பெற்றோரின் விவரங்கள் —

| தகப்பன் | தாய் |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| இலங்கைப் பிரசையா : | இலங்கைப் பிரசையா : |
| (தே.அ.அ. இல. (ஏதேனும் இருப்பின்) : | (தே.அ.அ. இல. (ஏதேனும் இருப்பின்) : |
| வதிவிட முகவரி : | வதிவிட முகவரி : |
| .............................. | .............................. |
| .................................. | .............................. |

*பொருத்தமற்றதைக் கீறிவிடவும்

### வெளிப்படுத்துகை

4. நான்*/மேற்கூறப்பட்ட எனது பிள்ளை *வேறு ஏதேனும் நாட்டின் பிரசையொருவர் அல்ல என நான் வெளிப்படுத்துகின்றேன்.

எனது அறிவுக்கெட்டியவரை மேற்போந்த விவரங்கள் உண்மையானவை என இத்தால் நான் பயபக்தியுடனும் நேர்மையுடனும் உண்மையுடனும் வெளிப்படுத்துகின்றேன்*/சத்தியஞ்செய்கின்றேன்.*

..................................................

விண்ணப்பகாரரின் கையொப்பம் அல்லது பெருவிரலடையாளம்.

திகதி : ......................

*...........................ஆம் திகதியாகிய இன்று ............................இல் உறுதிப்படுத்தப்பட்டது*/சத்தியஞ்செய்யப்பட்டது.*

எனது முன்னிலையில்

..................................

ஒப்பம் :
சமாதான நீதிவான் அல்லது
சத்தியப்பிரமாண ஆணையாளர்.

சமாதான நீதிவான் அல்லது
சத்தியப்பிரமாண ஆணையாளரின்
பெயரும் முகவரியும் : ..........................................................
..........................................................
..........................................................

**அட்டவணை ஆ** (பிரிவு 6அ)

**(349 ஆம் அத்தியாயமான) பிரசாவுரிமைச் சட்டத்தின் 6அ என்னும் பிரிவின்கீழான இலங்கை பிரசாவுரிமைச் சான்றிதழ்**

குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் ......................................

ஆகிய நான், சட்டத்தின் பிரிவு 6அ என்பதன் ஏற்பாடுகளால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு ......................................
(முகவரியைக் குறிப்பிடவும்)

என்னும் முகவரியைச் சேர்ந்த ......................................
(பெயரைக் குறிப்பிடவும்)

என்பவர் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு இலங்கைப் பிரசையொருவராவார் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.".

**பிரசை தொடர்பிலான விவரங்கள்**

பெயர் :......................................................................

இலங்கைப் பிரசையொருவரான/இலங்கைப் பிரசைகளான பெற்றோரின்/பெற்றோரின் பெயர் :

1) ................................................

2) ................................................

பிறந்த தேதியும் இடமும் : ......................................................

பால் : ..................

ஆளடையாள அட்டை இல. (இருப்பின்) : ......................................

தேதி : .....................

குடியகல்வு, குடியகல்வுக் கட்டுப்பாட்டதிகாரி".

*பதிவுசெய்யப்பட்ட ஆட்கள் வம்சாவளி மூலமான பிரசைகளாகக் கருதப்படல்.*

**14.** இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு முன்னர் இலங்கைப் பிரசை ஒருவராக 11 ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஆள் ஒருவர், இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் தொழிற்பாடு காரணமாக, வம்சாவளிமூலம் இலங்கைப் பிரசை என்னும் அந்தஸ்தை பெறுகின்றவிடத்து, அத்தகைய ஆள், இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து வம்சாவளிமூலமாக இலங்கைப் பிரசையாகக் கருதப்படல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாசம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.